செய்தி வெளியீடு எண் : 877 நாள்: 01.06.2022

**வெளிநாடுகளிலிருந்து மீட்கப்பட்ட தமிழக கோவில் சிலைகள், தமிழ்நாடு சிலை திருட்டு தடுப்புப் பிரிவு போலீசாரிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி...**

இன்று (01.06.2022) புதுடெல்லியில் ஒன்றிய கலாச்சார அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு ஒன்றிய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை இணை அமைச்சர் திரு. கிஷன்ரெட்டி அவர்கள், 7 குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட 10 சிலைகளை தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, இ.கா.ப. அவர்களிடம் ஒப்படைத்தார்.

தமிழகம் ஒரு வளமான கலாச்சாரப் பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்ட மாநிலமாகும். இங்குள்ள ஆயிரக்கணக்கான பழமையான கோவில்களில் கலை நயம்மிக்க நேர்த்தியான பழமையான விலை மதிப்பற்ற கற்சிலைகளும், உலோகச் சிலைகளும் ஆயிரக்கணக்கில் உள்ளன.

இத்தகைய தொன்மையான சிலைகளை மேற்கத்திய நாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களும், கலைக் கூடங்களும், தனி நபர் கலைப் பொருள் சேகரிப்பாளர்களும் என்ன விலை கொடுத்தேனும் வாங்கத் தயாராக உள்ளார்கள்.

இதன் காரணமாக கடந்த காலங்களில் தமிழக கோவில்களிலிருந்து விலை மதிப்பற்ற சிலைகள் திருடப்பட்டு, வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டு அங்குள்ள அருங்காட்சியகங்கள் மற்றும் கலைப் பொருள் வியாபாரிகளுக்கும் சட்டத்திற்கு புறம்பாக விற்கப்பட்டன. அத்தகைய சிலைகள் அங்குள்ள அருங்காட்சியகங்களிலும் கலைப் பொருள் சேகரிப்பாளர்களிடமும் காணக் கிடைக்கின்றன.

தமிழக கோயில்களிலிருந்து கடந்த காலங்களில் திருடப்பட்ட சிலைகள் குறித்து குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவை சிலை தடுப்புப் பிரிவினால் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

காணாமல் போன இந்தச் சிலைகள் வெளிநாடுகளில் மீட்பதற்கான முயற்சி காவல் துறையினால் எடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறை தலைமை இயக்குநருக்கு உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, திருடப்பட்டு, கடத்தப்பட்ட சிலைகளை மீட்க தனிப் படைகள் அமைக்கப்பட்டன.

தனிப்படை விசாரணையின் போது திருடப்பட்ட சிலைகள் பல வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களிலும், கலைப் பொருள் சேகரிப்பாளர்களிடமும் உள்ளன எனக் கண்டறியப்பட்டது. தமிழ்நாடு சிலை திருட்டு தடுப்புப் பிரிவு போலீசார், மேற்படி சிலைகள் தமிழகத்தின் கோவில்களில் இருந்து திருடப்பட்டவை என்பதை நிரூபிக்க வேண்டிய சட்டப்படி செல்லத்தக்கச் சாட்சியங்கள் மற்றும் தடயங்களைச் சேகரித்து அத்தகைய ஆதாரங்களைத் தமிழக அரசு மூலம் அந்நாடுகளுக்கு அனுப்பி வைத்தது.

அந்தச் சிலைகள் தமிழகத்தின் கோவில்களில் இருந்து திருடப்பட்டவை என்பதை சட்டப்படி, நிரூபித்து, சிலைகளை இந்தியாவிற்கு மீட்டுக் கொண்டு வரத் தமிழகச் சிலை திருட்டு தடுப்புப் பிரிவு கடும் முயற்சி செய்து வந்தது.

அத்தகைய கடும் முயற்சியின் பயனாக கடந்த காலங்களில் தமிழக கோவில்களில் இருந்து திருடப்பட்ட, விலைமதிப்பற்ற 10 புராதன உலோக மற்றும் கற்சிலைகள் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளின் அருங்காட்சியகங்களிலிருந்து மீட்கப்பட்டு, அவை புதுடெல்லியில் உள்ள இந்தியத் தொல்பொருள் துறையினர் வசம் ஒப்படைக்கப்பட்டன.

ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை இணை அமைச்சர் திரு.கிஷன்ரெட்டி அவர்கள் இன்று 01.06.2022 மாலை புதுடெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில், 7 குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட 10 சிலைகளை தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநரிடம் ஒப்படைத்தார். இந்நிகழ்ச்சியில், காவல் துறை இயக்குநர், சிலை திருட்டு தடுப்புப் பிரிவு, முனைவர்.கி.ஜெயந்த்முரளி, இ.கா.ப. மற்றும் சிலை தடுப்புப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றார்கள்.

வெளிநாடுகளிடமிருந்து மீட்கப்பட்ட 10 சிலைகள் தமிழகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கும்பகோணம் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சம்பந்தப்பட்ட கோயில்களில் வெகுவிரைவில் ஒப்படைக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஒன்றிய பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் கலாச்சாரத் துறை இணை அமைச்சர் திரு. அர்ஜீன் ராம் மேக்வால், மாண்புமிகு ஒன்றிய வெளியுறவு மற்றும் கலாச்சாரத் துறை இணை அமைச்சர் திருமதி. மீனாட்சி லேகி, மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை, பால்வளம் மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு. எல். முருகன், காவல் துறை இயக்குநர், சிலை திருட்டு தடுப்புப் பிரிவு, முனைவர். கி. ஜெயந்த்முரளி, இ.கா.ப. மற்றும் சிலை தடுப்புப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றார்கள்.

மீட்கப்பட்ட சிலைகளின் புகைப்படம் மற்றும் முழுவிவரங்கள் பின் இணைக்கப்பட்டிருக்கின்றன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in